**Tamilmanam International Research Journal of Tamil Studies**
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 242–249
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# பாமாவின் படைப்புகளில் சாதி தீண்டாமைகள்

**முனைவர் .சமுத்திரசெல்வி மா***

முனைவர் மா. சமுத்திரசெல்வி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் .சமுத்திரசெல்வி மா — samuthiraselvi84@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | — |
| **DOI** | — | **Article ID / கட்டுரை எண்** | TAJP-2026-00053 |

**Abstract / ஆய்வுச்சுருக்கம்**

தமிழிலக்கிய வரலாறானது சங்க இலக்கியத்தில் தொடங்கி, பக்தி இலக்கியம், அற இலக்கியம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் என்று வளர்ந்து வந்தது. அத்தகைய வளர்ச்சியானது தற்காலத் தமிழிலக்கிய வரலாற்றில், நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், உரைநடை, கட்டுரைகள் என்ற அளவிற்கு வளர்ந்து வந்துள்ளது. அந்நிலையில் நாவல் என்ற வரிசையில், சமுதாய மாற்றத்தை விரும்புவோர் எழுதக்கூடிய, சமுதாயத்துடன் தொடர்புடைய வரலாறு, அரசியல், பொருளாதார, கலாச்சார நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. அந்த வரிசையில் தலித் இன மக்கள் குறித்து எழுதப்பட்ட பாமாவின் படைப்புக்களின் வழி, தலித்தியமும் பற்றியும், அவர்களின் சாதித் தீண்டாமைகள் பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப் படுகின்றது.

**Keywords / திறவுச்சொற்கள்:** பாமா; தலித்; தலித்தியம்; தலித்திய பெண்கள்; சாதித் தீண்டாமைகள்; கருக்கு; தழும்புகள் காயங்களாகி.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மா, மு. . (2026). பாமாவின் படைப்புகளில் சாதி தீண்டாமைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8736

## முன்னுரை

உலகில் மனிதனாகப் பிறந்த அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும். மனிதனுக்கு மனிதன் வேற்றுமை பாராட்டக் கூடாது என்பது முறையாகும். மனிதர்களைச் சமமாகப் பாவித்து வாழ்வதுதான் மனித உரிமை எனலாம். எனினும் செய்யும் தொழில் காரணமாக மனிதர்களிடையே வேற்றுமை உணர்வு நிலவி வருகிறது. ஔவை, வள்ளுவப் பெருந்தகைப் போன்றோர் மட்டுமல்ல, இன்னும் பலர் 2000ஆண்டுகளுக்கும் மேலாகச் சாதியில்லை என்றோ, அல்லது சாதியால் மேன்மை கீழ்மை இல்லை, அனைவரும் சமம் என்றோ திரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளனர். ஆனாலும் இந்தியாவில் இன்னும் சாதி ஒழியவில்லை. சமுதாயத்தில் புரையோடிப்போய் இருக்கும் இந்த சாதியானது, மனித சமூகத்தை எவ்வாறு கீழான நிலைகளுக்கெல்லாம் உள்ளாக்குகிறது என்பதை ஒவ்வொரு படைப்பாளர்களும் எடுத்துரைக்கின்றனர். அந்தவகையில் படைப்பாளர் பாமா அவர்கள் தன்னுடைய

படைப்புகளில் சாதி தீண்டாமைகளை எவ்வாறு வெளிக்காட்டியுள்ளார் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சாதியின் தோற்றம்**

சாதியின் தோற்றமானது **“கி.பி.16,17-ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் வாணிபம் செய்த போர்த்துக்கீசிய கடற்பயணிகள் தாங்கள் எதிர்கொண்ட குழுக்களைக் “காஸ்ட்டாஸ” (Castas) என்று குறிப்பிட்டனர். இச்சொல்லிலிருந்து தான் “காஸ்ட்” (Caste) என்ற ஆங்கிலச் சொல்லும் பிரெஞ்சுச் சொல்லும் உருவாயின. உயிரின வகை (Species) விலங்கு மற்றும் தாவர மரபு வகைகள் (Breeds)) மனித இனங்கள், கிளைகள், மரபு வழி போன்ற பொருள்படவும் இச்சொல் விளங்கிற்று.”**[1]

எனவே “காஸ்ட்” என்ற வார்த்தை ஐரோப்பிய மூலத்தை அடிப்படையாகக் கொண்டது. வருணம், சாதி போன்ற நம் மண்ணைச் சார்ந்த கருத்தாக்கங்களின் அரைகுறையான மொழியாக்கமாகத்தான் “காஸ்ட்” என்ற சொல் விளங்குகிறது.

**சாதி சொல் விளக்கம்**

சாதி என்ற சொல்லுக்குத் திராவிட மொழிகளில் வேர்ச்சொல் இல்லை. இந்தோ, ஐரோப்பிய வேர்ச்சொல்லான “ஜா" என்பதிலிருந்து ஜாதி என்ற வடமொழிச்சொல் உருவாயிற்று. இவ்வேர்ச் சொல்லுக்குப் **“பிறப்பு” என்பதே பொருளாகும். ஜன்மம் (பிறவி) ஜாதகம் (பிறப்புக் குறிப்பு) பத்ஜா (பத்மத்தில் பிறந்தவள்) கிரிஜா (மலையில் பிறந்தவள்) முதலிய வடமொழிச் சொற்களை இவ்விடத்தில் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பிறப்புக்கான மரபணுவைக் குறிக்கும் ‘பநநெ’ என்ற ஆங்கில மொழிச் சொல்லுக்கும் இதுவே அடிப்படையாகும்”**[2] என்று கூறப்படுகிறது.

ஒருவர் தனது சாதியினைத் தாமாகத் தேர்ந்து கொள்ள இயலாது. பிறப்பினாலேயே அது வரையறுக்கப்படுகிறது. ஒவ்வொரு சாதியும் தன்னளவில் அகமண உறவினால் கட்டப்பட்ட ஒரு சமூக அலகாகும். ஒவ்வொரு குறிப்பிட்ட நிலவியல் பகுதியினை அடிப்படையாகக் கொண்டு சாதி செயல்படுகிறது. அதற்கென ஒரு நீண்ட கால அளவினையும் கொண்டுள்ளது. சாதிககுரிய வரலாறுகள் தொன்மை வாய்ந்தவை.

மேலும், சாதிப் படிநிலை வரிசை என்ற கருத்து பெரிதும் சுத்தம், அசுத்தம் என்ற கருத்துக்களின் மீதுதான் தங்கியுள்ளது. பார்ப்பனர்கள் மிகவும் சுத்தமானவர்கள் என்று கருதப் படுகிறார்கள். அதே நேரத்தில் தீண்டப்படாதவர்களும் - ஓரளவுக்கு – பெண்களும் மிகவும் இழிவானவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

ஒருவரின் வேலை அவரது, சாதி அடையாளத்துடன் நெருக்கமாகத் தொடர்புடையது. சுத்தம் - தீட்டு என்னும் கருத்துக்களை நெருக்கமாகப் பின் தொடர்வதாகும். அதேசமயம் தீண்டப்படாத ஒரு செருப்புத் தொழிலாளியின் தொழில் மிகவும் இழிவானதாகக் கருதப்பட்டது.

**“சாதிய அல்லது நால்வருண அமைப்பு முழுமையாக அழிக்கப்படாதவரை தலித்துகளின் துன்பத்துக்கு முடிவு காண முடியாது”**[3] என்றே சாதி ஒழிப்பு சமுதாய அமைப்புகள் வலியுறுத்திக் கொண்டே போகின்றன.

**சாதி வரையறை**

சாதிகளின் வரையறைகளைப் பல்வேறு அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். அந்தவகையில் அறிஞர்களின் கூற்றுக்களை படைப்பாளர் பாமாவும் தன்னுடைய கருத்துக்களோடு ஒப்பிட்டு தெளிவுப்படுத்துகிறார்.

**ரைஸ்லி**

ரைஸ்லி என்பவர் சாதியைப் பின்வருமாறு வரையறை செய்கிறார். **“குடும்பங்கள் அல்லது குடும்பங்கள் அடங்கிய குழுக்களின் தொகுதியே சாதியாகும். அவை ஒரு பொதுவான பெயரைக் கொண்டிருக்கும். மானிடம் அல்லது தெய்வீகம் சார்ந்த புராண முன்னோர்களிடமிருந்து வரப்பெற்ற ஒரு பொதுவான தோற்றம் உடையதாகக் கருதப்படுகிறது. துலைமுறை தலைமுறையாகக் கொணரப்பட்ட ஒரே மரபுவழித் தொடராகவும், ஒரே இனம் அல்லது வகையைச் சார்ந்த குழமமாகவும் ஒரு குறிப்பிட்ட தொழில் புரிவோராகவும் சாதி அமையும்”**[4] என்றும் குறிப்பிடுகிறார்.

**டாக்டர் அம்பேத்கார்**

**“சாதி என்பது இந்துக்கள் கலந்து உறவாடுவதற்குத் தடையாக உள்ள கற்சுவரோ, கம்பி வேலியோ அல்ல் சாதி என்பது ஒரு எண்ணம், ஒரு மனநிலை. எனவே சாதியை ஒழிப்பது ஒரு பௌதீகத் தடையை அழிக்கும் செயல் அல்ல. மக்களின் எண்ணத்தில் மாற்றம் ஏற்படுத்தும் செயல்”**[5] என டாக்டர் அம்பேத்கார் கூறுவதாக அருணன் குறிப்பிடுகிறார்.

**விவேகானந்தர், பாரதியார்**

**“இந்தியா முழுவதையும் பிராமண தேசமாகச் செய்துவிட்டால் நல்லதென்பது என்னுடைய அபிப்ராயம். எந்த ஜாதியாக இருந்தாலும் சரி, அவன் மாமிச பட்சணத்தை நிறுத்தும்படிச் செய்து, அவனுக்கு ஒரு பூணூல் போட்டு, காயத்ரி மந்திரம் கற்பித்துக் கொடுத்துவிட வேண்டும். இதுதான் விவேகானந்தர் சொல்லிய உபாயம். கூடியவரை நல்ல உபாயமும்கூட. ஆனால் மேல்வகுப்பினர் தம்முடைய உயர்வை மறந்து கீழ் வகுப்பினருடன் கலத்தல் இதனினும் சிறந்த உபாயமாகும்”**[6] எனப் பாரதியார் கருதியதாக அருணன் குறிப்பிடுகிறார்.

**சேரி**

இந்தியாவில் தலித் மக்கள் கிராமங்களில் வாழ்கின்ற போதும் கிராமம் என்பது வேறாகவும், சேரி என்பது வேறாகவும் தனித்து வைக்கப்பட்டுள்ள வெளிகளிலேயே வாழ்கின்றனர். வெளி என்பது வாழ்கின்ற சூழலையே தீர்மானிக்கவல்லது. சேரிக்கான விதிகள் தனித்துச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விதிகளிலிருந்து மீறும்போது ஆதிக்கச் சாதியினரின் தண்டனைகளுக்குத் தலித்துகள் ஆளாக வேண்டியுள்ளனர். மனித உரிமை இங்கு மறுக்கப்படுகிறது. சாதி வரிசையில் காலத்துக்குக் காலம், சாதிகள் மேலே ஏறியதும் உண்டு: இறக்கப்பட்டதும் உண்டு: அரசர்களும், பிராமணர்களும், கோவில்களும் சாதி வரிசையில் சாதிகளை நிலைநிறுத்தும் பணியை மேற்கொண்டார்கள். தீண்டத்தகாத சாதிகள் சாதி வரிசைக்குள் வந்துவிடாதபடி, கடுமையாகக் கண்காணிக்கப்பட்டன. கட்டாய வேலை, கூலியில்லா உழைப்பு, அடிமைத்தொழில், அசுத்தம்படும் தொழில் ஆகியவற்றுக்காகத் தீண்டத்தகாத சாதிகள் உருவாக்கப்பட்டு ஊர்களுக்கு வெளியே சேரிகளில் குடியமர்த்தப்பட்டனர். தீண்டப்படாதோர் ஆதி முதல் கிராமத்திற்கு அப்பால் வசித்து வந்தனர். தீண்டப்படாதோர் இங்கும் அங்கும் தான் கிராமத்தில் வெளியே வசிக்கிறார்கள் என்று இல்லை: இந்திய உபகண்டமெங்கும் எல்லாக்

கிராமத்திலும் சேரி என்பது கிராமத்திற்கு அப்பால்தான் இருக்கிறது. தீண்டப்படாதோர் சேரிவாசிகளாகவே இருந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.

**பறையர்**

**“பறையர் என்போர் ஆரியர்களால் அல்ல, திராவிடர்களால் வென்று கீழ்ப்படுத்தப் பட்டவர்கள். பறையர் ஆதிவாசிகளாவர். வேறுஇனத்தைச் சேர்ந்தவர்களானபடியால், அவர்களுடன் விவாகம் செய்வதோ, அவர்களைத் தங்களுடன் சேர்ப்பதோ, தங்களை இழிவுபடுத்தும் என்று கருதினர். இந்தக் கருத்து ஒரு இடத்திற்கு இட்டுச் செல்கிறது. அதாவது, தீண்டப்படாதோர் என்பவர்கள் ஆதிவாசிகள் நாகரீகமற்றவர்கள் என்பதேயாகும். இது அர்த்தமற்றது. இவ்வாறு கூறுவதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை”**[7] என்கிறார் டாக்டர் அம்பேத்கார்.

**படைப்பில் சாதி**

உலகில் எந்த நாட்டிலும் எந்த மதத்தின் அடிப்படையிலும் நம் நாட்டிலுள்ளபடி சாதிகளோ, சாதிக்கொடுமைகளோ இல்லை. சாதிகளும் பிறவியில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேற்றுமைகளும் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவையே. இச்சாதியத்திற்கு அடிப்படைகள், வேலைப் பிரிவினைகளும் அதன்மூலம் பெருவாரியான மக்களின் உழைப்புச் சக்திகளைச் சுரண்டுவதுமே. “அந்தக் காலம்” என்னும் சிறுகதையில், தலித் மக்களுக்கான வேலைப் பிரிவினைக் குறித்துப் பாமா கூறும்போது, **“நம்ம பெயல்க பூராம் மேகலக்குடி ஆளுகளுக்குத்தான் வேலவெட்டி செஞ்சானுக. அவனுக தெருவுல மாடுகன்னு செத்துப் போனா தூக்கியாந்து பெதப்பானுக. அவனுக வீடுகள்ள எழவு உழுந்தா, நம்ம பெயலுகதான் ஊரு ஊருக்குப் போயி எழவு சொல்லிட்டு வரனும். எழவு வீட்ல மேளம் அடிக்குரதும்; நம்ம பெயல்கதான். பெணத்த தூக்கிக் கொண்டு போயி எரிக்கிறதும் நம்மாளுகதான்;.” நாளுப்பூராம் மேளம் அடுச்சா ஒத்த ரூவா குடுப்பானுக அப்ப”**[8] மனிதர்களுக்கு மனிதர்கள் வேறுபாடு காட்டி, வேலைப் பிரிவினையையும் வைத்து, குறைந்த கூலியும் கொடுத்து, தாழ்ந்த சாதியினரை முன்னேற விடாமல் பார்த்துக் கொள்வதில் உயர்சாதியினரின் சுயநலம் நன்கு வெளிப்படுவதை உணர்ந்து கொள்ள முடிகிறது. தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர்களை மனிதர்களாகவே உயர்சாதியினர் மதிக்காத ஒரு நிலை இங்குக் காணப்படுகிறது. தலித்மக்களின் உழைப்பில், அவர்களின் உயிர்களுக்குக் கூட உத்திரவாதம் இல்லாத நிலையை இங்குக் காண முடிகிறது.

**வருணக் கோட்பாடு**

தீண்டாமை நிலைபெறுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்துவருவது வருண சாதியமே. இந்திய மக்களின் ஆன்மீக மதிப்புகளையும், சமூக வாழ்க்கையினையும் ஆழமாக ஆராய்ந்த முனைவர் ந.சுப்பிரமணியன், **“பிறப்பை அடிப்படையாகக் கொண்ட வருணக் கோட்பாடு முழுமையும் இறுகிப்போன ஒன்று: அது ஜனநாயகத்திற்கு எதிரானது: சமதர்மத்துக்கு முரணானது: சமூகத்தைப் பல தனிப்பிரிவுகளாக நிலையாகப் பிளவுபடுத்துவது: தனித்n;தாழில்களை வருணப்படி வரையறுப்பது”**[9] என்று குறிக்கிறார். இந்நிலை தலித் மக்களின் சுயமரியாதை, சுயதகுதி, சுயநன்மதிப்பு, சுயமாண்பு ஆகிய அனைத்தையும் இழக்கச் செய்தது.

**“நாய்க்கமாருக வேற பள்ளர்களத் தூண்டி உட்டாக. அவனுக சக்கிலியப் பெயல்கள்ளாம் சும்மா கெடக்கயில, நீங்க மட்டும் ஏண்டா பறப்பெயல்களோடெ**

**சேந்துகிட்டு சாதி ஒழியனும் அது இதுன்னு வெவரமில்லாம பேசிக்கிட்டுத் திரிறீக. அடுத்த வேள கஞ்சிக்கு லாட்டரி அடிக்கிற பெயல்க, பெருசா அம்பேத்கார் செல வைக்கானுகளாம். என்னமோ நாலெழுத்து படுச்சுப் போட்டம்னு இம்புட்டு நட்டனத்தஞ் செய்றானுக”**[10] என்று கூறும் நாய்க்கர்களின் தூண்டுதலின் பேரில், பள்ளர்கள் பறையர்கள் ஒருவருக்கொருவர் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டு, கொலை செய்யும் அளவிற்குத் துணிந்து விட்டார்கள் என்று மேல்நிலைச் சாதிகளின் ஒடுக்குமறையினை பாமா படைப்பில் பதிவு செய்துள்ளார்.

## சாதியப் பஞ்சாயத்து அல்லது கட்டப் பஞ்சாயத்து

இந்தியாவெங்கும் கட்டப் பஞ்சாயத்து, பல்வேறு மாநிலங்களில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக, தமிழகத்தில் உள்ள கிராமங்களில் இந்த வகைப் பஞ்சாயத்துக்கள் ஏறக்குறைய ஒரு கட்டட வசதியில்லாத உயர்நீதி மன்றங்கள் போல் செயல் படுகின்றன. சாதியக் கட்டமைப்போடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள கட்டப்பஞ்சாயத்து அமைப்பு தாழ்த்தப்பட்ட தலித் சமூகத்திற்குள்ளும் தன்னுடைய தாக்கத்தை விட்டுச் சென்றிருப்பது ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் தருகிறது. புதுப்பட்டி என்ற தலித் கிராமத்தில் கூட்டப்பட்ட கட்டப்பஞ்சாயத்து, அதே சமூகத்தைச் சேர்ந்த மரியம்மாள் என்ற இளம் பெண்ணுக்கு ஒழுக்கம் சம்பந்தப்பட்ட வழக்கில் தண்டனையும், தீர்ப்பும் வழங்கியுள்ளது. சாதியப் பஞ்சாயத்தின் எச்சம், அதனுடைய நீட்சி தலித் கிராமம் வரை வந்து ஆட்சி செய்வதைக் காண முடிகிறது.

**“மரியம்மாள மறுவடியும் அவுகய்யன் அடிக்க வர பயந்து போயி கால்ல உழுந்து மன்னிப்புக் கேட்டா. மாணிக்கத்த யாரும்கால்ல உழச் சொல்லல. பெறகு மரியம்மாளுக்கு எரனூறு ரூவாயும், மாணிக்கத்துக்கு நூறு ரூவாயும் தெண்டம் போட்டாக”**[11] தவறிழைத்தவன் ஆணாக இருந்தாலும், கொடுக்கப்படும் தண்டனையை அதிகம் அனுபவிப்பவள் பெண்தான் என்ற கருத்தானது இங்குப் பதிவாகிறது.

## சாதியப் போராட்டம்

சாதியப் போராட்டம் என்பது, அடிப்படையில் பொருளாதாரப் போராட்டமே. துறவற வாழ்க்கை வாழ்வதற்காகச் சென்ற, தன்னுடைய வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வினைக் குறித்துப் பாமா கூறும்போது, **“டிரெயினிங்கெல்லாம் முடுச்சு சிஸ்டரா ஆறதுக்குக் கொஞ்சநாள் இருந்துச்சு. அங்க இருந்த சிஸ்டரு ஒரு கிளாஸ்ல, சில சபைகள்ள அரிசனப் பிள்ளைகள சிஸ்டராச் சேத்துக்கமாட்டாக, அவுகளுக்குத் தனிச்சபைகூட எங்கயோ இருக்குன்னா. எனக்குத் தூக்கிவாரிப் போட்டுச்சு. என்னடா இது கடேசி நேரத்துல வந்து இப்படி சொல்லுதுன்னு மனசுக்குள்ள வெசனமாப் போச்சு. சரி எதுக்குங் கேட்டுக்குவோம்னு அவுககிட்ட போயி இந்தமாதிரி நானு ஒரு அரிசனப் பிள்ளை, ஒங்க சபையில அரிசனப் பிள்ளைகள சேத்துக்குவீகளான்னு கேட்டேன். அவுக ஒடனே, வேற எந்த சபையும் ஒன்ன சிஸ்டரா கூப்பிட்டாகளான்னு கேட்டாக. ஆமா நானு இதுக்கு முன்னாடி ஒரு மடத்து பள்ளிக்கொடத்துல வேல பாத்துக்கிட்டு இருக்கையில, அவுக அந்த சபையில சேரச் சொன்னாகன்னு சொன்னேன். அப்ப அவுக கேட்டுருக்காகள்ள. அதனால ஒன்னுமில்லை. நீ இங்க இருக்கலாம்னு சொன்னாங்க. எனக்கு அப்படியே அந்த எடத்துலயே மறஞ்சு இல்லாமப் போயிட மாட்டோமான்னு இருந்துச்சு. இந்த சாதி இல்லாத எடமே இல்லையான்னு பொலம்பிட்டு**

**கெடந்தேன"**[12] என்று சாதி வெறியினால் தனக்கு ஏற்பட்ட மனவேதனையைப் பாமா பதிவு செய்துள்ளார்.

**சாதிக் கொடுமையைத் தடுக்கும் உபாயம்**

ஒவ்வொருவரும் அவரவர் சாதியைப் பலப்படுத்துவதுதான் முன்னேற்றத்திற்கு வழி: அதுவே சாதிக் கொடுமையைத் தடுக்கும் உபாயம். அவரவர் சாதியைக் கட்டிக் காத்துப் பெருமைப்படுத்தி உயர்த்தினால்தான் ஆணவச் சாதிகளின் அட்டூழியம் அழியும். இது சாதி வெறி அல்ல: ஏனெனில் தலித சாதிகள் தம்மைக் கட்டிக் காத்துப் பெருமைப்படுத்துவது சாதிக் கொடுமை புரியும் பிரிவினருக்கு எதிரான போராட்ட வடிவமாகும்.

**"நம்ம இங்க இருக்கம்னு இத்தினிக்கூட அச்சமில்லையே...நம்மள ஒரு பொருட்டாவெ மதிக்காமல்ல போறானுக. நீங்க என்ன பெரிய கொம்பா? நீங்க இருந்தா, நாங்க சிரிக்கக் கூடாதா? பேசக் கூடாதா? இது சனநாயக நாடு. நாங்க எங்னகுள்ளயும் பேசுவோம். சிரிப்போம். வௌாடுவோம். செயிப்போம். இந்தா பாத்தியா வாலிபால் வௌாண்டு செயிச்ச கப்பு. நல்லா பாத்துக்கோ" சொல்லிக் கிட்டே கப்பத் தலைக்கு மேல தூக்கிக்கிட்டு ஒரு சுத்துச் சுத்துனான் அந்தோணி. ஒடனே மத்த பெயலுக பூராம் கைதட்டி விசிலடுச்சாங்க"**[13]

சாதி வெறி பிடித்து அலையும் உயர்சாதியினருக்கு, பறையர் இன இளைஞர்கள், தகுந்த பதிலடி கொடுத்துச் செல்வதை அறியமுடிகிறது. சாதி, சாதி என்று கூக்குரலிடும் உயர்சாதியினர் அனைவருக்கும் இது ஒரு சவுக்கடி போன்றுள்ளது. சாதியைக் காரணம் காட்டியே சமூகத்தில், தங்களை உயர்ந்தவர்களாகக் கருதுவோருக்கு எதிரான ஒரு போராட்ட நிகழ்வாக இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது.

**தலித்தும் இழிநிலையும்**

தலித்துக்கள் சமூக பொருளாதார கலாச்சார ரீதியில் தாழ்ந்தவர்கள், சோம்பேறிகள், தடித்த தோலர்கள், சுரணையற்றவர்கள், மன ஊனர்கள், நாய் கழுதைகளுக்கு நிகராகத் தங்களைச் சுய இழிவு செய்து தாழ்த்திக் கொள்பவர்கள் கஞ்சி - கூழ் குடிப்பதற்கும் இல்லாத தரித்திரர்கள்! எசமானர்கள், பண்ணையாளர்கள், முதலாளிகள் எவ்வளவு குட்டினாலும், கொட்டினாலும் முகம்மலர வளைந்து, குழைந்து, குனிந்து, நெளிந்து, தலையைச் சொரிந்து வாங்கிக் கட்டிக் கொண்டு, அடிபணிந்து அவர்கள் கோபத்தின் வடிகாலாகவோ, நகைப்பூட்டுபவர்களாகவோ திருப்திப்படுத்தி வைப்பதற்காகவே பிறவி எடுத்;தவர்கள்போல் காட்சிப் படுத்தப் படுகின்றனர் என்று தலித்துக்களின் இழிநிலை குறித்து முனைவர் அந்தோனி குருசு குறிப்பிடுகிறார்.

இதனையே பாமா, தன்னுடைய பாட்டியே இவ்வாறான இழிநிலைக்கு ஆளான நிகழ்வினைப் படைப்பின் வழி பதிவு செய்கிறார், **"நாய்க்கரம்மா பழைய சோறு எட்ட நின்னுட்டு பாட்டி பாத்திரத்துல ஊத்திட்டு போனது. அவுங்க பாத்திரம், பாட்டி பாத்திரத்தைத் தொட்றக் கூடாதாம். தீட்டாம். பெறகு ஒரு நேரம் பாட்டிகிட்ட இப்படியெல்லாம் செய்யக்கூடாது, அசிங்கமா இருக்குதுன்னு சொன்னேன். பாட்டி சொன்னாக: நமக்குச் சோறு போடுற மகராசனுக அவுக இல்லன்னா, எப்பிடி நம்ம பொழைக்க முடியும்? பரம்பரை பரம்பரையா அவுக மேச்சாதி, நம்ம கீச்சாதின்னு இருக்குதுல்ல. அதை மாத்த முடியுமா?"**[14] என்ற பாட்டியின் பேச்சானது, காலங்காலமாகத் தலித் மக்கள் அடிமைகளாகவும், சேவகம் செய்பவர்களாகவும்; வாழ்ந்து வருவதையும், அதனை எதிர்த்து தலித் மக்களால்

வாழ முடியுமா? என்ற ஆதங்கத்தையும், இயலாமையையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**சாதியும் அரசியலும்**

ஒடுக்கப்பட்ட சாதிகளின் பிரச்சினையை ஒரு சமூகப் பிரச்சினையாக மட்டும் பார்ப்பது தவறாகும். ஒடுக்கப்பட்ட சாதிகள், பகைச் சக்திகளது (பார்ப்பனர்கள், பனியாக்கள், பெரும் ஜமீன்தார்கள்) பிடியிலிருந்து விடுதலைக்கும் சமத்துவத்திற்குமான வாய்ப்பைப் பெறத் தொடர்ந்து முயற்சித்து வருவதால் இது ஓர் அரசியல் பிரச்சினையாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகைச் சக்திகள் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு விடுதலையையும், சமத்துவ வாய்ப்பையும் மறுத்து, தங்கள் ஆதிக்கக் கோட்பாடுகளைத் திணித்து வந்திருக்கின்றன என்பதுதான் உண்மையான வரலாறு என்பதனை அண்ணல் அம்பேத்கார் தெளிவுபடுத்துவதாக, முனைவர் அந்தோனி குருசு கூறுகிறார். மேகலக் குடிகாரனுகளுக்கு எம்புட்டுத் திமுருனா, அவனுக எகத்தாளமாச் சொன்னானுகளாம்.

**"அங்கங்க தனித் தொகுதிகள்ளயே இவஞ்சாதிக்காரனுக நிக்க முடியாமெ கெடக்கயில... இவனுகளுக்கு எம்புட்டுக் கொழுப்புன்னா பொதுத் தொகுதில, அதுவும் நமக்குப் போட்டியா நிப்பானுக. இப்பத் தெரியும்ல"**[15] என்று கூறும் ஆதிக்கச் சாதியாரின் சாதிவெறியானது, அரசியல் வரைக்கும் உயர்ந்திருப்பதையும், அரசியலில் ஈடுபட நினைக்கும் தலித் மக்கள்மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியிருப்பதையும் அறிய முடிகிறது.

**முடிவுரை**

இவ்வாறாக, படைப்பாளர் பாமாவின் படைப்புகளில் சாதியின் தோற்றம், கிறித்தவ மதம் சார்ந்த திருச்சபையிலும், துறவற மடங்களிலும் காணப்படும் சாதிவெறி, படைப்பாளர் தலித்தாக இருந்ததால் அனுபவித்த சாதிப் பிரச்சினைகள், தலித் கிறித்தவ மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் ஆகியவற்றை ஆய்வுக்குட்பட்ட பாமாவின் படைப்புக்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளன. சாதியத்தின் கொடுமைகளைப் படைப்புக்களில் பதிவு செய்துள்ள பாமா, சாதிய விடுதலைக்கான தீர்வையும் வழங்கியிருக்கிறார் என்பதை இக்கட்டுரையின்வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. Marriott, Mckim, Social Stratification: Caste in Encyclopaedia Brittanica,Vol.27, p.348.
2. தே.சு.மாசில்லாமணி, காமராசர் மாவட்ட வெம்பக்கோட்டை ஒன்றிய அருந்ததியரின் நாட்டார் வழக்காறுகள்- ஓர் இனவரைவியல் ஆய்வு, ப.191.
3. ப.சிங்கராயர், தலித் காலம், ப.57.
4. காமராசர் மாவட்ட வெம்பக்கோட்டை ஒன்றிய அருந்ததியரின் நாட்டார் வழக்காறுகள்- ஓர் இனவரைவியல் ஆய்வு, ப.191.
5. அருணன், தமிழகத்தில் சமூகச் சீர்திருத்தம் இருநூற்றாண்டு வரலாறு, ப.254.
6. மேலது, ப.149.
7. ஏ.எஸ்.கே., டாக்டர் அம்பேத்கார் வாழ்க்கை வரலாறும் தாழ்த்தப்பட்ட மக்கள்

பிரச்சினையும், ப.80.

8. பாமா, ஒரு தாத்தாவும் எருமையும், ப.54.

9. அ.அந்தோணி குருசு, தலித்தியக் கருத்தாடல், ப.168.

10. பாமா, வன்மம், ப.75.

11. பாமா, தழும்புகள் காயங்களாகி, பக்.135-136.

12. மேலது, ப.33.

13. பாமா, வன்மம், ப.26.

14. பாமா, தழும்புகள் காயங்களாகி, ப.26.

15. பாமா, ஒரு தாத்தாவும் எருமையும், ப.208

© 2026 முனைவர் .சமுத்திரசெல்வி மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..